**செய்தி வெளியீடு எண் : 1742** **நாள் : 24.08.2023**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு சட்டப் பேரவையில், 2023–24 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் கூட்டத்தொடரின் போது "தமிழ்நாட்டில் ஜவுளித்தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் முதலீடு தொடர்பான வழிகாட்டுதல்கள் மற்றும் உதவிகள் வழங்கிட துணிநூல் துறை கட்டுப்பாட்டின் கீழ் பிரத்யேக "ஜவுளித்தொழில் ஊக்குவிப்புப் பிரிவு" (Textile Promotion Cell) அமைக்கப்படும்" என அறிவித்தார்.

அதற்கிணங்க, துணிநூல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ், "ஜவுளித்தொழில் ஊக்குவிப்புப் பிரிவு" அமைக்கப்பட்டுள்ளது.

கதவு எண். 34 – கத்தீட்ரல் தோட்ட சாலை, நுங்கம்பாக்கம் சென்னையில் உள்ள துணிநூல் ஆணையர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த ஜவுளித்தொழில் ஊக்குவிப்புப் பிரிவானது துணிநூல் ஆணையர் முனைவர். மா. வள்ளலார் இ.ஆ.ப., அவர்களால் 24.08.2023 – ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது.

இந்தப் பிரிவு முற்பகல் 10.30 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரையிலும், பிறகு 2.00 மணி முதல் 5.30 மணி வரை செயல்படும். புதிய தொழில்முனைவோர், ஜவுளித்தொழில் தொடங்க அனைத்து வித ஆலோசனைகளும் இங்கு வழங்கப்படும். எனவே, தொழில்முனைவோர்கள், ஜவுளித் துறையில் தொழில் துவங்குவதற்கான முதலீடுகள் சம்மந்தமாகவும், மாநில அரசு மற்றும் ஒன்றிய அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் சம்மந்தமாகவும், தொழில்நுட்ப ஜவுளிகள் சார்ந்த விவரம் மற்றும் சந்தேகங்களை இப்பிரிவில் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களுக்கு தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.

1) தரை வழி இணைப்பு எண் – 044–45020017–Extension 107 மற்றும் 111
2) திரு. வி. கி. ஆனந்தகுமார், முனைய அலுவலர்/ துணை இயக்குநர் – 7904378336, 9488722622

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in